கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

**MCOP.No.132/2025**

நாள் : 19.06.2026
ம.சா.2 ரவிக்குமார்

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.12ல் ரதி பில்டர்ஸ் என்பது ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்றால் – ஆம். அதற்கு நீங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் – இல்லை. அந்த பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் எத்தனைபேர் உறுப்பினர்களாக உள்ளார்கள் மற்றும் யார் யார் சேர்மேன், செக்ரட்டரி என்றால் – அதில் நான் மட்டும்தான் ஓனர் ஆவேன். ஒரு நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டுமென்றால் அதற்கு கம்பெனி சட்டத்தின்படி குறிப்பிட்ட நபர்கள் உறுப்பினர்களாவும், சேர்மேனாகவும், இயக்குநராகவும் இருக்கவேண்டுமென்றும் ஆனால் உங்களது நிறுவனம் அதுபோல் சட்டத்தை பின்பற்றி பதிவு செய்யப்படவில்லை என்றுசொன்னால் – சரியல்ல. உங்களது நிறுவனத்தில் எத்தனைபேர் வேலை செய்கிறார்கள் என்றால் – 8 –10 பேர் வேலை செய்கிறார்கள் அவர்கள் லேபர்கள் ஆவார்கள். உங்கள் நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு நீங்கள் பிராவிடட் பண்ட், பிடித்தல் மற்றும் செலுத்துதல் விவரம், வருகைப்பதிவேடு, சம்பளப்பட்டியல் உள்ளிட்ட எதனையும் நீங்கள் வழக்கு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் – சரிதான். உங்களிடம் வேலை செய்யும் 8 பேரும் permanent worker அல்ல என்றுசொன்னால் – சரிதான். அந்த workers அனைவரும் தினக்கூலிகள் என்றும், வேலைக்கு வந்தால் சம்பளம் என்றுசொன்னால் – சரிதான். மேற்கண்ட ஊழியர்களுக்கு நீங்கள் பணம் Cash ஆக கொடுப்பீர்களா அக்கவுண்ட்டில் கிரடிட் செய்வீர்களா என்றால் – நான் Cash கொடுப்பேன். அவ்வாறு சம்பளம் கொடுக்கப்பட்ட சம்பள பணப்பற்று எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் – இல்லை. அரசு முறைசாரா தொழிலாளர் நல வாரியத்தில் இறந்துபோன

செல்வராஜ் உறுப்பினராக சேர்த்து அடையாளஅட்டை ஏதேனும் பெற்று நீங்கள் கொடுத்துள்ளீர்களா என்றால் – இல்லை. இறந்தபோனவரும், நீங்களும் ஒரே ஊர்காரர் என்றுசொன்னால் – ஆம். நீங்கள் குடியிருக்கும் முகவரியும் உங்கள் நிறுவனமாக இருக்கும் முகவரியும் ஒரே முகவரி என்றுசொன்னால் – சரிதான். நீங்கள் Contractor என்பதற்கு தகுந்த சான்று உள்ளதா என்றால் – உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் – சரிதான். நேரமிண்மை காரணமாக மேலும் IDOP 334/2025, OS 74/2023, OS 272/2023, OS 71/2023, OS 202/2023, OS 112/2021 வழக்குகள் சாட்சியங்கள் எடுப்பதற்கு பாஸ் ஓவர் செய்யப்பட்டுள்ளதால் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறுறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.